## நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன்கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்கும் திட்டம் – பேரூர்.

நெம்மேலிக்கு அருகில் உள்ள பேரூரில் 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்கான திட்ட மேலாண்மை ஆலோசகராக திருவாளர்கள் M/s.SMEC பன்னாட்டு கூட்டு ஒப்பந்ததாரர் நிறுவனத்திற்கு பணி ஆணை 06.11.2019 அன்று வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்காக திட்டவடிவமைப்பு, திட்ட மதிப்பீடு மற்றும் ஒப்பந்த ஆவணங்களை தயாரித்து வழங்கவும், ஒப்பந்தங்கள் பெறப்பட்டவுடன்,மதிப்பாய்வு செய்து. மேலும், திட்டத்திற்கான பணி ஆணை வழங்கப்பட்டவுடன், திட்ட பணிகளை மேற்பார்வை செய்யவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு, ஜூன் 2026 முன் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் பயன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் குடிநீர் தாம்பரம் , பம்மல் மற்றும் பொழிச்சலூர், பல்லாவரம்(பகுதி), மாடம்பாக்கம், செம்பாக்கம், சிட்லபாக்கம், பீர்க்கங்கரனை, பெருங்களத்தூர், திருநீர்மலை, குன்றத்தூர், காட்டாங்குளத்தூர், மாங்காடு, திருப்போரூர், தையூர், வெளிச்சல், படூர், சிறுசேரி, மாம்பாக்கம், சோனலூர், பொன்மார், தண்டலம், கானத்தூர் ரெட்டிக்குப்பம், புதுப்பாக்கம்,கொளத்தூர், தொழில் சாலைகள் , வணிக & மிதவை , ஆலந்தூர், வளசரவாக்கம், மாத்தூர் & மாதவரம் , விருகம்பாக்கம், தகவல் தொழில்நுட்பத் துறைகள் & தொழில்சாலைகள் ஆகிய பகுதி மக்களுக்கு வழங்கப்படவுள்ளது . இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 22.67 லட்சம் மக்கள் பயனடைவார்கள்.